# கிருபையுள்ள வார்த்தை®

**KIRUBAIYULLA VAARTHAI**

லூக்கா (LUKE) 4:22

VOL - 26
ஆண்டு சந்தா ரூ. 100/-

ஜுன் - JUNE
தனிப் பிரதி ரூ. 10/-

2025
வெளிநாட்டு சந்தா ரூ. 1,000/-



ஞானவான்கள் ஆகாயமண்டலத்தின் ஒளியைப்போலவும்,
அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள்
நட்சத்திரங்களைப்போலவும் என்றென்றைக்குமுள்ள
சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள்.

தானியேல் 12:3

ஆசிரியர் Dr. பிலேமோன் ராஜா

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...


ஆசிரியர் உரை 3

பெண்கள் பகுதி 7

வாலிபர் பகுதி 9

சிறுவர் பகுதி 11



*In Memory of J.C. CHOATE*

*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **Dr. P.C. PHILEMON RAJA**

ஆசிரியர் குழு

V. கிங்ஸ்லி ராஜா, M.Th.,
R. ஆண்டனி ராஜா, D.Th.,
E. ஜோசப் பிரதீப், B.Th., C. கியாமிலஸ் கார்த்திக், B.Sc.,
P. பேபி ராஜா, D.Th., P. பெவர்லி லிடியா B.B.A.,

சட்ட ஆலோசகர்கள்
அட்வகேட் B. கருப்பசாமி பாண்டியன் B.A., B.L.
அட்வகேட் V. சுப்பிரமணியன் M.A., B.L.


## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

**தமிழன் T.V. யில்**

ஞாயிறு காலை 7.00 மணி

**நம்பிக்கை T.V. யில்**

ஞாயிறு மதியம் 3.30 மணி

செய்தியாளர்கள்

போதகர். **பிலேமோன் ராஜா** M.A., M.Th.,
(Director - JC School of Evangelism)

சகோ. **கிங்ஸ்லி ராஜா** M.Th.,
(இணை ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை)

இந்த மாதம் பிறந்த நாள்
மற்றும் திருமண நாள் காணும்
வாசகர்கள் அனைவருக்கும்
அன்பின் வாழ்த்துக்கள்...





நமது
**'கிருபையின் கீதங்கள்'**
பாடல் புத்தகம்
புதிய பதிப்பு
ஆயத்தமாக உள்ளது.

554 தமிழ் பாடல்கள்
40 ஆங்கில பாடல்கள்
112 சேர்ந்திசை பாடல்கள்
464 பக்கங்கள்

வேண்டுவோர் தொடர்பு கொள்ளவும் : 92 4431 4431, 999 426 7004


**கிருபையுள்ள வார்த்தை**
நம்மை ஆத்தும ஆதாயத்தின் ஆசீர்வாதத்தினை
அனுபவிக்க வழிநடத்தும் வல்ல பிதாவின் வார்த்தை

YouTube
@graciouswordcoc


**World Literature Publication :** Kirubaiyulla Vaarthai, Post Box No. 15, Arasaradi, Madurai - 625 016. India

- P.C. பிலேமோன் ராஜா



# ஆத்தும ஆதாயம் செய்வதின் அவசியமும் ஆசீர்வாதமும்

## THE NECESSITY AND BLESSING OF SOUL WINNING

அன்பான கிருபையுள்ள வார்த்தை வாசகர்கள் அனைவருக்கும், என்றும் உயிரோடிருக்கின்ற நமது ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தினால், எனது அன்பின் வாழ்த்துக்கள் மற்றும் ஜெபங்கள்.

இந்த மாதம், கர்த்தருடைய மக்கள் ஆத்தும ஆதாயம் செய்வதின் அவசியமும் ஆசீர்வாதமும் என்னென்ன என்பதனை உங்களுடன், பரிசுத்த வேதாகமத்தின் துணைக்கொண்டு, பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசையுடன் தியானிப்பதில் அகமகிழ்கின்றேன்.

கர்த்தருடைய பிள்ளையாகிய நான், ஏன் ஆத்தும ஆதாயம் செய்ய வேண்டும்? அதன் அவசியம் என்ன? அப்படி செய்வதினால் உண்டாகும் ஆசீர்வாதங்களும் நன்மைகளும் என்ன? மற்றும் அதனை செய்ய தவறினால் உண்டாகும் விளைவுகளும் தண்டனைகளும் என்ன? என்பதனை நாம் நிச்சயம் நன்கு அறிய வேண்டும்.

### 1) ஆத்தும ஆதாயம் செய்வதின் அவசியம்

நாம் முதலாவது, ஆத்தும ஆதாயம் செய்வதின் அவசியத்தினை அறிய வேண்டும். நான் ஏன் ஆத்துமாக்களை ஆண்டவருக்காக, பரலோகத்திற்காக ஆயத்தம் செய்ய வேண்டும். இது நாம் நிச்சயமாக அறிய வேண்டிய, மிகச்சிறந்த காரியம்.

மாற்கு 16:15,16 பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான். முதலாவதாக, சீடர்களாகிய நமக்கு, தலைவராகிய கிறிஸ்து கொடுத்த, மிக முக்கியமான கட்டளை (மத்தேயு 28:18-20). ஆத்தும ஆதாயம் செய்வதாகும். கிறிஸ்துவின் அடியவர்களாகிய நாம் ஒவ்வொருவரும், தவறாமல் செய்தே ஆக வேண்டும். சாக்குபோக்கு சொல்ல முடியாது மற்றும் கூடாது (2தீமோ. 4:2).

1 தீமோத்தேயு 2:4 எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார். அடுத்ததாக, மனிதர்கள் எல்லாரும் இரட்சிக்கப்பட வேண்டும் என்பது, நம்மை படைத்த பரம பிதாவின் சித்தமாகும். ஒருத்தர் கூட கெட்டு, நரகத்திற்கு சென்றுவிடக்கூடாது என்பதே அவரின் பிராதான விருப்பமாகும் (1தீமோத்தேயு 2:4; மத்தேயு 18:14).

1 கொரிந்தியர் 9:16 சுவிசேஷத்தை நான் பிரசங்கித்துவந்தும், மேன்மைபாராட்ட எனக்கு இடமில்லை. அது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது. சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ. அடுத்ததாக, விசுவாசியாகிய எனக்கு கொடுக்கப்பட்ட, மிகப்பெரிய பொறுப்பு நற்செய்தி அறிவித்தலாகும் (1கொரிந்தியர் 9:16,17), பரிசுத்த ஆவியானவர் அந்த பொறுப்பினை நினைவுப்படுத்தி செயல்படுத்திட தூண்டினார் (வெளி. 3:22; அப்.8:26,29; 13:1-5; 2தீமோத்தேயு 1:14).

1 பேதுரு 2:9 நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள். அடுத்ததாக, நாம் கிறிஸ்துவை பற்றி அறிவிக்கும்படி தெரிந்துக்கொள்ளப்பட்ட சந்ததியாக இருக்கின்றோம். நாம்

தெரிந்துக்கொள்ளப்பட்டதின் நோக்கங்கள் முதன்மையானது, கிறிஸ்துவை அறிவிப்பதாகும் என்பதனை நினைவில்கொள்வோம். (சங்கீதம் 22:30; ரோமர் 8:30; 1 கொரிந்தியர் 1:27; மத்தேயு 22:14).

ரோமர் 1:14,15 கிரேக்கருக்கும், மற்ற அந்நியர்களுக்கும், ஞானிகளுக்கும், மூடருக்கும் நான் கடனாளியாயிருக்கிறேன். ஆகையால் ரோமாபுரியிலிருக்கிற உங்களுக்கும் என்னால் இயன்றமட்டும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க விரும்புகிறேன். அடுத்ததாக, நாம் நற்செய்தியை அறிவிப்பதற்கு கடனாளியாக இருக்கின்றோம். அதனை நம்மால் இயன்றமட்டும் (பெலன், உயிர்) இருக்குமட்டும் செய்துக்கொண்டே இருக்க வேண்டும். நான் சந்திக்கின்ற ஒவ்வொரு ஆத்துமாவிற்கும், நற்செய்தியை அறிவிக்க நான் கடனாளி என்ற உணர்வு நம்மில் எப்பொழுதும் இருக்க வேண்டும்.

1 தீமோத்தேயு 1:12 என்னைப் பலப்படுத்துகிற நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னை உண்மையுள்ளவனென்றெண்ணி, இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தினபடியால், அவரை ஸ்தோத்திரிக்கிறேன். அடுத்ததாக, கர்த்தர் நம்மை உண்மையுள்ளவரென்று நம்பி, நற்செய்தி சொல்லும் பொறுப்பினை மீட்கப்பட்ட ஒவ்வொரு விசுவாசிகளிடமும் கொடுத்திருக்கின்றபடியால், நாம் நற்செய்தியை அறிவிக்க வேண்டும். நற்செய்தி அறிவிக்கின்ற பொறுப்பினை நம்மிடம் கொடுத்த கர்த்தர், அதனை நாம் செய்வோம் என்று, அற்பமான நம் மீது நம்பிக்கை கொண்டுள்ளார். அதனால் தான் அவர் இறை தூதர்களை இப்பணிக்காக பயன்படுத்தவில்லை என்பதனை நினைவில் கொள்வோம்.

மத்தேயு 10:32,33 மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கைபண்ணுவேன். மனுஷர் முன்பாக என்னை மறுதலிக்கிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக மறுதலிப்பேன். அடுத்ததாக, கிறிஸ்துவின் நற்செய்தியை, நான் மற்றவர்களிடத்தில் சொல்வதின் மூலம், நான் கிறிஸ்துவை அறிக்கையிட்டால் தான், கிறிஸ்துவும் என்னை பிதாவின் முன்பாக அறிக்கை செய்வார், நான் அறிக்கையிடாவிடில், அது மறுதலித்தலாகும், அப்பொழுது கிறிஸ்துவும் என்னை மறுதலித்துவிடுவார். இது மிகப்பெரிய ஆபத்தான காரியமாக நமக்கு அமைந்துவிடக்கூடிய அபாயமாக இருக்கின்றது. கிறிஸ்து உங்களை அறியேன் என்று சொல்வது அவர் மூலம் நாம் செய்யும் ஜெபங்கள் கூட பிதாவினை சேர முடியாமல் போய்விடலாம் என்பதனை கருத்தில்கொள்வோம்.

## 2) ஆத்தும ஆதாயம் செய்வதின் ஆசீர்வாதம்

ஆத்தும ஆதாயம் செய்வதின் அவசியத்தினை அறிந்த நாம், அப்படி செய்வதில் நமக்கும் மற்றவர்களுக்கும் உண்டாகும் பலன்களையும் அறிய வேண்டும். ஏனெனில் கர்த்தர் நம்மை எதை செய்ய சொன்னாலும், அது நமது நன்மைக்காக (நல் வாழ்விற்காக) மாத்திரம் தான் இருக்கும். இதனை நாம் நன்கு அறிவோம்.


### வாசகர்களின் கவனத்திற்கு

அன்பான வாசகர்களே!
உங்கள் ஆண்டு சந்தா தொகையை
G-Pay, PhonePe மூலம் அனுப்பி
உங்கள் சந்தாவை
புதுப்பித்துக் கொள்ளவும்.
நன்றி!

ஆண்டு சந்தா : ரூ. 100/-
No. 92 4421 4421

வங்கிக் கணக்கில் செலுத்த,

A/c Name : Kirubaiyulla Varthai
A/c No. : 57022317422
IFSC Code : SBIN0011068
Branch : SBI - Bye Pass Road Branch, Madurai.

யோவான் 12:26 ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக் கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான். ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார். ஆத்தும ஆதாயம் செய்கின்ற ஒருவரை பிதாவானவர் கனம்பண்ணுவார் என்று ஆண்டவர் இயேசு சொல்வதிலிருந்து, அந்த பணி எவ்வளவு தெய்வீகமானது மற்றும் தேவையானது என்பதனை நாம் அறிய முடியும். அதே வேளையில் அதனை செய்கின்றவரை பிதாவானரால் கனப்படுத்தப்படுகின்றார் என்பது எவ்வளவு நன்மை மற்றும் மகிமையானது என்பதனையும் அறிந்துக்கொள்ள முடியும்.

நீதிமொழிகள் 11:30 நீதிமானுடைய பலன் ஜீவவிருட்சம். ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக் கொள்ளுகிறவன் ஞானமுள்ளவன். ஆத்துமாக்களை ஆதாயம் செய்கின்றவர்களை பைபிள் ஞானவான்கள் என்கின்றது. அப்படியென்றால் என்ன பொருள், ஞானவான்களால் தான் ஆத்தும ஆதாயம் செய்ய முடியுமா? என நாம் வினவினால், அதன் பொருள் அதுவல்ல. ஆத்துமாக்களை ஆதாயம் செய்கின்றவர் யாரோ, அவரே கர்த்தருடைய பார்வையில் ஞானியாக இருக்கின்றார். பைத்தியமாக தோன்றுகின்ற பிரசங்கித்தினாலே, தன்னால் தெரிந்துக்கொள்ளபட்ட பெலவீனம் மற்றும் பைத்தியமான மனிதர்களைகொண்டு அவர் ஆத்துமாக்களை இரட்சிக்கின்றார் என்றே பைபிள் போதிக்கின்றது. ஆகையால் ஆத்துமாக்களை ஆதாயம் செய்தல் என்பது ஞானமான செயல், அவைகளை செய்கின்றவர்கள் ஞானவான்கள் என்கின்றார். (1 கொரிந்தியர் 1:21,27) நம்மில் அநேகர் தன் பார்வைக்கு ஞானியாக இருக்கலாம், இன்னும் அநேகர் மற்றவர்கள் பார்வைக்கு ஞானியாக இருக்கலாம். ஆனால், ஒருவர் கர்த்தருடைய பார்வையில் ஞானவானாக இருப்பது எவ்வளவு உசித்தமானது என்பதனை நாம் உணர்ந்து பூரிப்படைய வேண்டும்.

தானியேல் 12:3 ஞானவான்கள் ஆகாயமண்டலத்தின் ஒளியைப்போலவும், அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப்போலவும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள். மேலும், பைபிள் அவர்களை ஞானவான்கள் என்றும், அப்படிப்பட்டவர்கள் நட்சத்திரங்களைப்போல சதாகாலமும் பிரகாசிப்பார்கள் என்கின்றது.

2 தீமோத்தேயு 2:2 அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத் தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி. அடுத்ததாக, ஆத்தும ஆதாயம் செய்தல் என்பது, ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து ஆரம்பித்த இரட்சிப்பின் சங்கிலியை உடையாமல், தொடர்ந்து கொண்டு செல்ல நமக்கு உதவுகின்றது. அதனால் தான் நாம் இரட்சிக்கப்பட்டோம். கிறிஸ்து பவுலிடம் ஒப்படைத்தார், பவுல் தீமோத்தேயு போன்ற மற்றவர்களிடம் ஒப்படைத்தார்கள், அவர்கள் முதலாம் நூற்றாண்டு விசுவாசிகளிடம் ஒப்படைத்தார்கள். அதுதான் இருபது நூற்றாண்டு கடந்து நம்மிடம் வந்து, நாம் இரட்சிக்க உதவியுள்ளது. நாம் இரட்சிக்கப்பட ஒருவர் காரணமாக (ஆசீர்வாதமாக) இருந்தது போல, நாம் இந்த நற்செய்தியை பரப்பும்போது மற்றவர்கள் வாழ்வில் இரட்சிப்பு உண்டாக ஆசீர்வாதமான கருவியாக மாறுகின்றோம். என்ன ஒரு பாக்கியம் இது. அதனால் பவுல், நற்செய்தி அறிவித்தல் என்பது தனக்கு கையளிக்கப்பட்ட, மாபெரும் கிருபை என்று மெய்சிலிர்கின்றார் (கலாத்தியர் 2:8-10). நாமும் நம்மிடம் கொடுக்கப்பட்ட இந்த கிருபையை எண்ணி, பேரானந்தமாக நற்செய்தியை நானிலமெங்கும் பரவ செய்வோமாக.

யாத்திராகமம் 20:24 மண்ணினாலே பலிபீடத்தை எனக்கு உண்டாக்கி, அதின்மேல் உன் ஆடுகளையும் உன் மாடுகளையும் சர்வாங்க தகனபலியாகவும் சமாதானபலியாகவும் செலுத்துவாயாக. நான் என் நாமத்தைப் பிரஸ்தாபப்படுத்தும் எந்த ஸ்தானத்திலும் உன்னிடத்தில் வந்து, உன்னை ஆசீர்வதிப்பேன். அடுத்ததாக, பரம பிதா தன்னைப்பற்றி

மற்றவர்களிடம் அறிவிக்கின்ற தம் அடியவர்களை தேடி சென்று ஆசீர்வதிப்பதாக வாக்களித்துள்ளார். இது பழைய ஏற்பாடு என்று நீங்கள் சொல்வது என் காதில் கேட்கின்றது. இந்த வாக்குத்தத்தம் கர்த்தருடைய தன்மையை வெளிப்படுத்துகின்றது. அது அவரைப்பற்றி பேசுபவர்களை அவருக்கு பிடிக்கும் மற்றும் அதினால் அவர் அவர்களை ஆசீர்வதிப்பார். இந்தத் தன்மை என்றும் மாறாது தானே. அப்படியென்றால், அவருடைய நற்செய்தியை அறிவிப்பவர்கள் ஆவிக்குரிய ஆசீர்வாதங் களையும், பூமிக்குரிய நன்மைகளையும் அவரால் பெற்றுக்கொள்வோம் என்பது அவரது தன்மையின் மூலம் நாம் பெறுகின்ற உறுதியாகும்.

1 கொரிந்தியர் 9:14 அந்தப்படியே சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்குச் சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாக வேண்டுமென்று கர்த்தரும் கட்டளையிட்டிருக் கிறார். அடுத்ததாக, ஆத்தும ஆதாயம் செய்கின்றவர்களுக்கு கர்த்தர் கூலியை (பலனை) தருவார். ஏனெனில் வேலையாள் கூலிக்கு பாத்திரவான் என்று சொன்னவர் அவர் (1தீமோத்தேயு 5:18) அவர்கள் தங்கள் தற்கால தேவைகளை குறித்தும், எதிர்கால தேவைகளை குறித்தும் கவலைகொள்ளத் தேவையில்லை (மத்தேயு 10:10). கர்த்தர் அவர்கள் வாழ்வில் படியளப்பதினாலே, எல்லாம் அதினதின் காலத்தில் நேர்த்தியாக செய்யப்படும். ஏனெனில் தனது ஊழியக்காரரின் சுகத்தினை விரும்புகின்ற கர்த்தருக்காக அவர்கள் வேலை செய்கின்றனர் (சங்கீதம் 35:27).

1 கொரிந்தியர் 9:16 சுவிசேஷத்தை நான் பிரசங்கித்துவந்தும், மேன்மைபாராட்ட எனக்கு இடமில்லை. அது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது. சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ. அடுத்ததாக, ஆத்தும ஆதாயம் செய்கின்றவர்கள், தேவ தண்டனையிலிருந்து தப்பிக்கொள்கின்றனர். சத்தியத்தினை அறிவிக்காமல் அடக்கி வைக்கின்ற ஒவ்வொருவரும் தேவ கோபத்திற்கும், தண்டனைக்கும் உரியவர்களாக இருக்கின்றனர்; (ரோமர் 1:18). ஆனால், அறிவிக்கின்றவர்கள் தங்களுக்கு வரவிருக்கும் பேராபத்திலிருந்து தங்களை பாதுகாத்துக் கொள்கின்றனர்.

1 கொரிந்தியர் 9:25-27 பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருப்பார்கள். அவர்கள் அழிவுள்ள கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறார்கள், நாமோ அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறோம். ஆதலால் நான் நிச்சயமில்லாதவனாக ஓடேன். ஆகாயத்தை அடிக்கிறவனாகச் சிலம்பம்பண்ணேன். மற்றவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன். ஆத்தும ஆதாயம் செய்கின்றவர்கள், தங்களை தாங்களே கட்டுப்படுத்துகின்றவர்களாகவும், நித்திய வாழ்வினை பெறுகின்றவர்களாகவும் தங்களை தாங்களே ஆதாயப்படுத்திக் கொள்கின்றனர். நாம் மற்றவர்களை ஆதாயப்படுத்த அதாவது மற்ற நபர்களின் ஆத்துமாவை காக்க எடுக்கின்ற முயற்சிகளில், நமது ஆத்துமாவை காக்கின்றோம். கர்த்தரிடம் பரிசாக நித்திய வாழ்வினை பெறுகின்றோம். இதனை சரியாக செய்த பவுல் நீதியின் கீரிடம் (நித்திய வாழ்வு) எனக்கு வைக்கப்பட்டிருக்கிறது. கிறிஸ்து எனக்கு தருவார் என்று உறுதியாக விசுவாசத்தினை அறிக்கை செய்தார் (2தீமோ 4:7,8). நாமும் அவ்வாறே செய்வோம்.

பிரியமானவர்களே! ஆத்தும ஆதாயம் செய்வதின் அவசியத்தினையும், அப்படி செய்வதினால் உண்டாகும் ஆசீர்வாதங் களையும் நாம் தியானித்தோம். நற்செய்தியை நானிலம் (உலகம்) எங்கும் பரப்புகின்ற, மாபெரும் பரிசுத்த பணி மீட்கப்பட்டவர்களாகிய நம்மிடத்தில் ஒப்புவிக்கப்பட்டுள்ளது. அதனை அர்ப்பணிப்போடு, ஆசையாக செய்வோம் மற்றும் இறையருள் பெறுவோம்.

– அன்புடன், ஆசிரியர்

பெண்கள் பகுதி

# வெற்றிக் கொடுப்பவர்

பிரியமானவர்களே! நமது ஆண்டவர் கிறிஸ்து இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

"தோல்வி" என்ற வார்த்தையை வாசிக்கும்போதும், கேட்கும்போதும் அந்த நிலையை நம் வாழ்வில் அடையும்போதும் நமக்குள் அப்படி ஒரு வலி, வேதனை, பயம் இருக்கும். ஆம், அது உண்மைதான்.

ஆனால் ஒரு கிறிஸ்தவர்களுடைய வாழ்க்கையில் அது இருக்கவே தேவையில்லை. ஏனென்றால் நம்மோடு இருப்பவர் வெற்றியாளர்.

- மரணத்தை வென்றார் / ஜெயமாக விழுங்கினவர்
- பாவத்தை வென்றார் / மேற்க்கொண்டவர்
- பிசாசை வென்றார் / துரத்தினார்
- அவிசுவாசத்தை துரத்தி விசுவாசமாக மாற்றினார்
- கிறிஸ்தவர்கள் வெற்றியாளர்கள் என்பதை உறுதி செய்கிறவர்.

(1 கொரி. 15:54-57). அப்படியென்றால், கிறிஸ்துவை நம் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு வாழும் நம் வாழ்க்கையும் வெற்றிதானே (யோவா. 16:33).

எது வந்தபோதும் சோராது, ஜெபித்து, விசுவாசத்தில் உறுதியாக இருந்து தங்கள் வாழ்க்கையில் வந்த கஷ்டங்களை, பிரச்சனைகளை, போராட்டங்களை, தோல்விகளை கர்த்தரால் வெற்றிப் பெற்ற சிலரைக் குறித்து நாம் காண்போம்.

**சாராள்:** தேவன் கொடுத்த வாக்குத்தத்தத்தை (எபி. 11:11) தன் வாழ்வில் ஏற்றுக்கொண்டதினால், வயது சென்றவளானபோதும், தேவசித்தம் அவள் வாழ்வில் வெற்றியைக் கொடுத்தது.

**அன்னாள்:** சோர்வின் உச்சத்திற்கே தள்ளப்பட்டாலும் பிறர் தன்னை புரிந்துகொள்ளவில்லை என்ற நிலை என்றாலும் அவள் மனிதர்களோடு போராடாமல் ஜெபித்திலே போராடி வெற்றி கொண்டாள் (1 சாமு. 1:15,17).

**எஸ்தர்:** சாதாரண பெண்ணாக வளர்க்கப்பட்டவர் தனக்கென்று அருமையான வாழ்வு விழைத்தபோது அதின் மூலம் தேவப்பிள்ளைகளின் கஷ்டத்தை போராட்டத்தை தன்னுடையதாக நினைத்து அவர்களோடே இணைந்து, தேவ சித்தத்தினாலே முயற்சி எடுத்து காப்பாற்றி வெற்றிப் பெற்றாள் (எஸ்தர் 4:16).

(தொடர்ச்சி... ௮ம் பக்கம்)

## அறிந்து கொள்வோம்

## மாதம் ஒரு "பூ"

## கொன்றை



கொன்றை அல்லது சரக்கொன்றை, சரக்கொன்னை (Cassia fistula, Golden rain tree அல்லது canafistula) என்பது பேபேசியே (Fabaceae) என்னும் தாவரவியற் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பூக்கும் தாவரம் ஆகும். இதன் தாயகம் இந்திய துணைக் கண்டம் மற்றும் அருகில் உள்ள தென்கிழக்கு ஆசிய நாடுகளாகும். பாகித்தானின் தெற்குப் பகுதிகளி லிருந்து, இந்தியா ஊடாகக் கிழக்கே மியன்மார் (பர்மா) வரையும், தெற்கே இலங்கைத் தீவு வரையும் இது பரவலாகக் காணப்படுகின்றது.

இது இந்திய மாநிலமான கேரளத்தின் மாநில மலராகும். இது மலையாள மக்களிடையே முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. அலங்கார அழகு தாவாரமாகவும் மருத்துவ குணம் வாய்ந்ததாகவும் உள்ளது. பண்டைய தமிழ் நூலில் இத்தாவரம் கொன்றை எனவும் சங்க காலத்தில் இது முல்லை நிலத்திற்குரிய பூவாகவும் கருதப்பட்டது. இது தாய்லாந்தின் நாட்டின் தேசியப் பூ மற்றும் மரமாகும்.

**ரூத்:** இளம் வயதிலே தன் கணவனை இழந்திருந் தாலும் தேவனை நம்பி, தேவப்பிள்ளைகளின் சொல் கேட்டு வாழ்ந்தது அவள் வாழ்வில் மாபெரும் வெற்றியைக் கொடுத்தது. முடிந்துபோன நிலைப்போல தெரிந்தாலும் தேவனைத் துணையாக அவள் தேர்ந்தெடுத்தது அவளுக்கு வெற்றியைக் கொடுத்தது (ரூத் 1:16).

**அபிகாயில்:** இவள் மகா புத்திசாலி. அழகுள்ள, தைரியமான பெண். ஆனாலும் கடவுளுக்கு பயந்து கடவுள் கொடுத்த ஞானத்தினாலே தன் எதிரியையும் தன்னுடன் சமாதானமாக வைத்தவள். இஸ்ரயேலின் தேவனைக் குறித்து நன்கு அவள் அறிந்து வைத்திருந்தாள். அவரே அவள் பயந்த காரியத்தில் வெற்றியைக் கொடுத்தவர் (1 சாமு. 25:23-35).

இப்படி வேதாகமத்தில இன்னும் அனேக பெண்களைக் குறித்து நாம் படித்துக்கொண்டே போகலாம். நம் மனதில் நாம் புரிந்துக் கொள்ளக்கூடிய காரியம் என்னவென்றால் வெற்றிப்பெறுவது மட்டுமே கிறிஸ்தவ வாழ்வு அல்ல. ஆனால். நாம் தேவன் மீது அதிகமான விசுவாசம், அன்பு வைத்திருக்கும்போது நம் ஜெபம் ஜெயமாக (வெற்றியாக) மாறும்.

நம் வாழ்வில் எது வந்தபோது அந்த சூழ்நிலைகளை அப்படியே தேவனுடைய பாதத்தில் வைத்துவிட்டு காத்திருந்தால் வெற்றிக் கொடுப்பவர் நம்மோடே இருந்து அவருடைய வல்லமையான திட்டங்களை அவர் சித்தப்படி நம்மீது விளங்கப்பண்ணுவார். (2 தீமோ. 4:7).

இயேசுவைப்போல வெற்றியுள்ளவர்களாய் வாழ நாமும் கிறிஸ்துவுக்குள் இருக்கும் ஒரு பெண்ணாக, வெற்றிப்பெற அவரைப்போல இந்த உலகத்தில அனைத்துப் பாடுகளையும், கஷ்டங்களையும், துன்பங்களையும் ஏற்றுக்கொண்டு வாழ வேண்டும். கிறிஸ்துவுக்குள் முடிவுபரியந்தம் நிலைத்திருந்து வெற்றிபெறுபவருக்கு ஜீவகிரீடம் நிச்சயம். **"தேவனால் பிறந்தவர்களுக்கு வெற்றி நிச்சயம்"** (1 யோவா. 5:4) வெற்றி பெற ஆயத்தப்படுவோம்.

– சகோதரி. **பெவர்லி விதியா கிங்ஸ்லி**

## பொதுவான செய்திகள்

# பப்பாளி பழம்



பப்பாளி ஒரு மலிவானதும், எளிதில் கிடைக்கும் பழம். இது பல்வேறு மருத்துவக் குணங்களைக் கொண்டுள்ளது. பப்பாளி பழம், இலை மற்றும் விதைகளை பயன்படுத்தி பலவிதமான மருத்துவ முறைகளில் பயன்படுத்தப்படுகிறது. பப்பாளி பழம், பப்பாளி சாறு, பப்பாளி இலை சாறு, பப்பாளி விதைகளை பயன்படுத்தி உடல்நலப் பிரச்சனைகளை குணப்படுத்தலாம்.

**பப்பாளி பழம் மருத்துவ குணங்கள்:**

- ★ பப்பாளி பழத்தில் வைட்டமின் ஏ, சி, ஈ மற்றும் ஆன்டிஆக்ஸிடன்ட்கள் அதிகம் உள்ளன, அவை உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை மேம்படுத்துகின்றன.
- ★ பப்பாளி பழம் செரிமானத்தை மேம்படுத்துகிறது, குடல் இயக்கத்தை சீராக்குகிறது.
- ★ பப்பாளி பழம், கல்லீரலை சுத்தப்படுத்துகிறது, கல்லீரலின் செயல்பாட்டை மேம்படுத்துகிறது.
- ★ பப்பாளி பழம், இரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்த உதவுகிறது, இதய ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது.
- ★ பப்பாளி பழம், சரும பிரச்சனைகளை தீர்க்க உதவுகிறது, முகப்பரு, முகச்சுருக்கம் போன்றவற்றை குறைக்கிறது.
- ★ பப்பாளி இலை சாறு, டெங்கு காய்ச்சல் மற்றும் பிளேட்லெட் குறைபாட்டை சரிசெய்ய உதவுகிறது.
- ★ பப்பாளி விதைகளை பயன்படுத்தி வயிறு சம்பந்தப்பட்ட பிரச்சனைகளை சரி செய்யலாம்.

**பப்பாளி பழம் சாப்பிடும்போது கவனிக்க வேண்டியவை:**

- ★ பப்பாளி பழத்தை அளவுக்கு அதிகமாக சாப்பிடக்கூடாது.
- ★ பால் பொருட்கள், மசாலா பொருட்கள், சிட்ரஸ் பழங்கள் போன்றவற்றுடன் பப்பாளி சேர்த்து சாப்பிடக்கூடாது.
- ★ பப்பாளி சாப்பிடும் போது ஏதேனும் அசௌகரியம் ஏற்பட்டால், உடனே மருத்துவரை அணுகவும்.

வாலிபர் பகுதி...

# நீர்க்கோவை வியாதியுள்ள ஒரு மனுஷன் சுகமாகுதல்

அன்பின் வாலிப தம்பி, தங்கைகளே! உங்கள் அனைவருக்கும் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

இந்த மாதம் நாம் நீர்க்கோவை வியாதியுள்ள ஒரு மனுஷனை ஆண்டவர் சுகமாக்கினதை குறித்த பாடங்களை படிக்கலாமா?

லூக்கா 14:1,2 **"ஒரு ஓய்வு நாளிலே பரிசேயரின் தலைவனாகிய ஒருவனுடைய வீட்டிலே அவர் போஜனம் பண்ணும்படிக்குப் போயிருந்தார். அப்பொழுது நீர்க்கோவை வியாதியுள்ள ஒரு மனுஷன் அவருக்கு முன்பாக இருந்தான். என்ன செய்வாரோவென்று ஜனங்கள் அவர்மேல் நோக்கமாயிருந்தார்கள்."**

ஓய்வுநாள் ஆராதனையை இயேசு முடித்து விட்டு, இயேசுவோடு எப்போதும் வாக்குவாதம் செய்கிற பரிசேயரின் தலைவன் ஒருவன், இயேசுவை விருந்துக்கு அழைத்ததால், அவனுடைய வீட்டிற்கு இயேசு சென்றார். அங்கு அநேக நியாயசாஸ்திரிகளும், பரிசேயர்களும் அழைக்கப்பட்டிருந்தனர். இயேசு தன்னை அழைக்கிறவர்களைக் கனம்பண்ணுகிறவர். அழைத்த வீட்டுக்கு மட்டுமல்ல அழைக்காத சகேயுவின் வீட்டிற்கும் இயேசு சென்றார் (லூக்கா 19:5). இதேபோல் இயேசு பல சமயங்களில் விருந்து வீடுகளுக்குச் சென்றதை வேதத்தில் பார்க்கிறோம். அவர்கள் நீர்க்கோவை வியாதியுள்ள ஒரு மனிதனை ஓய்வுநாளில் சுகமாக்குகிறாரா என்று பார்க்க, அவனை அவர்கள் வீட்டுக்கு அழைத்து வந்து வைத்திருந்தனர். ஜனங்களும் அவர் என்ன செய்வாரோ என்று பார்க்க ஆவலாயிருந்தனர்.

யூதர்கள் மிகவும் சுத்தமானவர்கள். பரிசேயர்கள் வியாதியுள்ளவர்களை விருந்துக்கு அழைக்க மாட்டார்கள். அதிலும் அந்த வியாதியஸ்தனை இயேசுவுக்கு முன்பாக உட்கார வைத்திருந்தனர். இயேசுவை ஒரு சதி வலையில் சிக்க வைக்கத்தான் விருந்துக்கு அழைத்திருந்தனர். பரிசேயர்கள் இயேசுவை எப்பொழுது, எதில் குற்றம் கண்டுபிடிக்கலாம் என்று காத்திருப்பவர்கள். இயேசு இந்த மனிதனை அந்த ஓய்வுநாளில் சுகமாக்கினால் ஓய்வுநாள் பிரமாணத்தை மீறினவர் என்று குற்றம் சாட்டலாமென்றும், இயேசு குணமாக்காமலிருந்தால் இயேசுவை இரக்கமுள்ளவர் என்று சொல்லுகிறீர்களே அது மாய்மாலம் என்றும் குற்றம்சாட்ட இருந்தனர். இது இயேசுவுக்குத் தெரியும் தெரிந்தே அங்கு சென்றார்.

இதேபோல், லூக்கா 11:3-லும் இயேசு பரிசேயன் அழைத்ததால் அவனுடைய வீட்டிற்குச் சென்றார். லூக்கா 7 : 36 - லும் பரிசேயன் ஒருவன் தன் வீட்டுக்கு இயேசுவை அழைத்திருந்தான் அப்பொழுதுதான் பாவியாகிய ஒரு ஸ்திரீ இயேசுவுக்குப் பரிமளத் தைலத்தைப் பூசினாள். நம்முடைய பிரதான ஆசாரியரான இயேசு, எபிரெயர் 7:26 பரிசுத்தரும், குற்றமில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும், வானங்களில் உயர்ந்தவருமாயிருக்கிறவர். இயேசுவோ எல்லோருக்கும் நன்மை செய்கிறவராகவே சுற்றித் திரிந்தார் (அப்போஸ்தலர் 10:38) இயேசுவின் பார்வையில் விருந்து என்பது ஐக்கியத்திற்கும், அன்புக்கும், நன்றிக்கும் அடையாளமாகக் கொடுப்பதாகும்.

## இயேசுவின் உபதேசம்:

லூக்கா 14:3-6 **"இயேசு நியாயசாஸ்திரிகளையும் பரிசேயரையும் பார்த்து: ஓய்வு நாளிலே சொஸ்தமாக்குகிறது நியாயமா என்று கேட்டார். அதற்கு அவர்கள் பேசாமலிருந்தார்கள். அப்பொழுது அவர் அவனை அழைத்து, சொஸ்தமாக்கி, அனுப்பிவிட்டு, அவர்களை நோக்கி: உங்களில் ஒருவனுடைய கழுதையாவது எருதாவது ஓய்வுநாளில் துரவிலே விழுந்தால், அவன் அதை உடனே தூக்கி விடானோ என்றார்."**

இயேசுவை அழைத்தவர்களுக்கு ஓய்வுநாள்

தான் முக்கியம். அவர்களுக்கு வியாதியிலிருந்து, வேதனையிலிருந்தும் ஒருவனுக்கு சுகம் கொடுப்பது முக்கியமல்ல என்றனர். இயேசு குற்றம் கண்டுபிடிக்க வந்தவர்களைப் பார்த்து ஓய்வுநாளில் சொஸ்தமாக்குகிறது நியாயமா என்று கேட்டதற்கு, அவர்கள் பேசாமல் இருந்தனர். இயேசுவின் சீஷர்கள் ஓய்வுநாளில் கதிர்களைக் கொய்து தின்றதால் மத்தேயு 12:2-லும் பரிசேயர்கள் இயேசுவிடம் ஓய்வுநாளில் செய்யத் தகாததை உம்முடைய சீஷர்கள் செய்கிறார்களே என்று கேட்டனர்.

மத்தேயு 22:35,36-லும் இயேசுவை சோதிப்பதற்காக நியாயப் பிரமாணத்தின் எந்தக் கற்பனை பிரதானமானது என்று கேட்டான். எனவே இயேசு அந்த வியாதியஸ்தனை தாமாக அழைத்து, அந்த வியாதியிலிருந்து உடனே அவனைக் குணமாக்கி அனுப்பினார். அதன்பின் அவர்களை நோக்கி உங்களிடம் உள்ள ஒரு கழுதையாவது, எருதாவது குழியிலே ஓய்வுநாளில் விழுந்தால் அதைத் தூக்கிவிட மாட்டீர்களா என்று கேட்டார். அதற்கு அவர்கள் பதில் கூறவில்லை. காரணம் நிச்சயமாக அவர்கள் அதைத் தூக்கி விடுவார்கள் என்பதுதான்.

அதேபோல் தேவையுள்ளவர்களுக்கு ஓய்வுநாளில் உதவி செய்வதில் எந்தத் தவறும் இல்லையென்பதை அவர்களுக்கு உணர்த்தினார். அந்த விருந்து வீட்டில் இறுகலான சூழ்நிலை உண்டானது. இவர்களிடமிருந்து கனி வரும் என்று இயேசு எதிர்பார்த்தார். ஆனால் அவர்களிடமிருந்து எந்தக் கனியும் வரவில்லை.

தேவன் தன்னால் தெரிந்து கொள்ளப் பட்டவர்கள் கனி கொடுக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறார். முதல் வருடமும், இரண்டாம் வருடமும் கனியில்லை என்றால், அந்த மரத்தை வெட்டிப் போட இயேசுவுக்கு சகல அதிகாரமும் உண்டு. நாம் ஒவ்வொருவரும் கனி கொடுக்கிறவர் களாகத் தேவன் எதிர்பார்க்கிறபடி வாழ அவருடைய சித்தத்திற்கு ஒப்புக் கொடுப்போம்.

நீர்க்கோவை வியாதி உள்ளவனை ஒரு நொடிப் பொழுதில் சுகமாக்கினார். கர்த்தரின் வல்லமையை இந்த அற்புதத்தில் பார்க்கிறோம் இதேபோல் நாமும் தீராத வியாதியான பாவ நோயாக இருந்தாலும், இயேசுவண்டை வரும்பொழுது அவர் நம்மை அவருடைய வார்த்தையின்மூலம் விடுதலை கொடுப்பார். ஆமென்.

– உங்கள் அண்ணன் **JP**

## Gospel Through Media by Evangelism Team

**Philemon & Kingsly in Tamil:** **Tamilan TV:** Sunday 7:00 - 7:15 am.
**Nambikkai TV:** Sunday 3:30 - 4:00 pm.

**Rajanayagam & Benny Martin in Tamil:** **Nambikkai TV:** Tuesday 6:30-7:00 am & Friday 7:30 - 8:00 am

**Arjunan in Tamil:** Every Monday - Saturday 6:00 pm on **Joy TV.**

**Hindi TV program: Sunny, Francis, & Vinay David:** Sunday (7:00-7:30) pm, Friday 8:00-8:30 pm All on **Subha Sandesh** Hindi Channel

**P. K. Varghese in Malayalam:** Every Saturday 6:00-6:30 am on **Jai Hind TV.**

**Joshua & Ricky Gootam in Telugu:**
Every Sunday at 6:00-6:30 p.m. on **Subhavartha TV.**
Saturday at 6:00-6:30 a.m. on **Araadhana TV.**
Every day at 7:00 a.m. and 3:00 p.m. on **Kanthi TV** in A. P. only.

**Amul Bansod – Aurangabad (Marathi)**
**MCN News** channel: Monday, Wednesday, Friday – 7:30 AM to 8:00 AM.

சிறுவர் பகுதி

# சவுல் அரசனாக வீழ்ந்துபோகுதல்

ஹாய் குட்டீஸ், இந்த மாதம் சவுல் அரசனாக விழுந்து போகுதல் பற்றி படிக்கலாம்.

ஒருநாள் சாமுயேல் தாத்தா சவுலை பார்க்கும்படி சென்றார். சாமுயேல் தாத்தா சவுலை பார்த்து ஒரு காரியத்தைச் சொன்னார், அதாவது சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், இஸ்ரயேல் மக்கள் எகிப்தில் இருந்து வந்தபோது அமலேக்கு மக்கள் அவர்களுக்கு வழிமறைத்த செய்கையை மனதில் வைத்திருக்கிறேன். இப்போதும் நீ போய் அமலேக்கிய மக்களை மடங்கடித்து அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் சங்கரித்து அவன்மேல் இரக்கம் வைக்காமல் ஆண்களையும், பெண்களையும், பிள்ளைகளையும், குழந்தை களையும், மாடுகளையும், ஆடுகளையும், ஒட்டகங் களையும், கழுதைகளையும் கொன்று போடக் கடவாய் என்கிறார் என்று சாமுயேல் தாத்தா சவுல் அரசனிடம் சொன்னார்.

உடனே சவுல் அரசன் இந்த செய்தியை மக்களுக்கு அறியப்படுத்தி மிகப் பெரிய படையை திரட்டி அமலேக்கு மக்களை முறியடிக்க புறப்பட்டான். சவுல் அரசன் அமலேக்கு மக்களை பெரியோர் முதல் குழந்தைகள் மட்டும் அனைவரையும் அழித்து போட்டான். மிருக ஜீவன்களில் அற்பமானவை களையும் உதவாதவைகளையும் அழித்துப் போட்டான். ஆனால் சவுல் அரசன் செய்த தவறான காரியம் என்னவென்றால் அமலேக்கு ராஜாவாகிய ஆகாகை உயிரோட வைத்ததும், மிருக ஜுவன்களில் முதல் தரமானதையும் இரண்டாம் தரமானதையும் நலமான எல்லாவற்றையும் அழித்துபோட மனதில்லாமல் அவைகளை உயிரோடே வைத்து, தன் தேசத்துக்கு எடுத்துக் கொண்டு சென்றான். பிள்ளைகளே நன்றாக கவனியுங்கள், சேனைகளின் கர்த்தர் சாமுயேல் தாத்தாவிடம் சொல்லி சவுல் அரசனிடம் சொன்ன காரியம் என்ன? அமலேக்கை



மடங்கடித்து அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் அழித்து போடுங்கள் என்று சொன்னார்.

ஆனால் சவுல் அரசனோ அமலேக்கின் ராஜாவாகிய ஆகாகையும் மிருக ஜீவன்களில் சிலவற்றையும் உயிரோடு வைத்ததும் ,கர்த்தருக்கு கீழ்படியாமல் அவருக்கு விரோதமான பாவத்தை செய்தான். இது எல்லாம் முடிந்த பிற்பாடு சாமுயேல் தாத்தா சவுல் அரசனை பார்க்கும்படி சென்றார். அதை பார்த்து எதிர்கொண்டு போய் கர்த்தர் சொன்ன வார்த்தையை நிறைவேற்றினேன் என்று சொன்னான். அப்பொழுது சாமுயேல் தாத்தா சவுலைப் பார்த்து அப்படி என்றால் ஆடு மாடுகளின் சத்தம் கேட்கிறதே அது என்ன என்று கேட்டார். கர்த்தருக்கு பலியிடும்படியாக அமலேக்கு தேசத்தில் இருந்து பிடித்துக் கொண்டு வந்தோம் என்றான். அப்பொழுது சாமுயேல் தாத்தா சவுல் அரசனைப் பார்த்து நீ கர்த்தருக்கு விரோதமான பாவத்தை செய்தீர் இனி உன்னை இஸ்ரயேலின்மேல் ராஜாவாய் இராதபடிக்கு உன்னை கீழே தள்ளி கர்த்தருடைய இருதயத்திற்கு ஏற்றவனை ராஜாவாக ஏற்படுத்துவார் என்று சொன்னார்.

பிள்ளைகளே! சவுல் அரசனிடம் இருந்து நாம் கற்றுக் கொண்டது என்ன? கர்த்தர் சொன்ன வார்த்தைகளை நினைவு கூர்ந்து முழுமையாக செய்யாமல் தனக்கென்று சில பொருட்களை எடுத்து வைத்துக்கொண்டு அதை கர்த்தருக்கு செலுத்துவேன் என்று சொன்னான். கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் பலிகள் செலுத்துவது முக்கியமல்ல கர்த்தர் அதை விரும்ப மாட்டார். கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுத்து கீழ்ப்படிவதே முக்கியத்துவம் வாய்ந்தது. ஆகையினாலே சவுல் ராஜா கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் போனதினிமித்தம் சவுல் ராஜ்யபாரத்தில் இருந்து தள்ளப்பட்டான். சிறு பிள்ளைகளே நன்றாக கவனியுங்கள் நீங்களும் கூட கர்த்தருடைய வார்த்தை என்ன சொல்லுகிறதோ அதை அப்படியே நினைவுகூர்ந்து கர்த்தருக்கு கீழ்ப்படிய கற்றுக் கொள்ளுங்கள்.

அப்படி கீழ்ப்படியும்பொழுது கர்த்தர் உங்களோடு இருந்து உங்களுக்கு நல்ல உடல் பெலனையும், ஆரோக்கியத்தையும், ஞானமும், அறிவும், புத்தியும், விவேகத்தையும் கொடுத்து உங்களை சிறந்த பாதுகாப்புள்ள வழியில் நடத்துவார். சவுல் ராஜாவைப் போல நீங்கள் நடவாதபடிக்கு எச்சரிக்கையாய் இருந்து நமது கர்த்தருக்கு கீழ்ப்படியுங்கள். அவருடைய வார்த்தைக்கு பயந்து நடுங்குங்கள் கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

மனப்பாட வசனம் : நீதிமொழிகள் 15:33 "கர்த்தருக்குப் பயப்படுதல் ஞானத்தைப் போதிக்கும்; மேன்மைக்கு முன்னானது தாழ்மை."

— சகோ. பீட்டர்

# காயீன் ஆபேலின் ஆராதனை

கிறிஸ்துவுக்குள் அன்பான செல்லப்பிள்ளைங்களா! எல்லாரும் எப்படி இருக்கீங்க?. இந்த மாதத்திற்காக கடவுளுக்கு நன்றி சொன்னீங்களா?. பரிசுத்த தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

கர்த்தருக்குப் பிரியமான செல்லப்பிள்ளைகளா!! இந்த மாதம் நாம் அனைவரும் சேர்ந்து கர்த்தர் உண்டாக்கிய முதல் குடும்பமாகிய ஆதாம் ஏவாளின் இரண்டு மகன்களைப் பற்றியும். அவர்கள் கர்த்தருக்கு செய்த முதல் தொழுகையைப் பற்றியும் படிக்கலாமா? வாங்க படிக்கலாம்.

ஆதாம் மற்றும் ஏவாள் முதலாவதாக காயீனைப் பெற்றனர். ஏவாள் கர்த்தரால் ஒரு மனிதனைப் பெற்றேன் என்றாள். பின்பு இரண்டாவதாக ஆபேல் என்னும் பெயர்கொண்ட மற்றொரு மகனையும் பெற்றனர். அருமையான செல்லக்குழந்தைகளா கர்த்தாரால் படைக்கப்பட்ட முதல் மனிதன் ஆதாமுக்கும் முதன் மனுஷி ஏவாளுக்கும் பிறந்த இரண்டு ஆண் பிள்ளைகள் இவர்கள்தான். கர்த்தர் மனிதர்களை படைத்ததற்கு பிறகு பிரசவத்தில், கர்த்தர் பிரசவிக்க செய்தவர்கள் இவர்கள்தான்.

அவர்கள் இருவரும் வளர்ந்த பிறகு ஆபேல் ஆடுகளை மேய்க்கிறவனானான். அவனுடைய சகோதரனாகிய காயீன் நிலத்தை பயிரிடுகிற விவசாய வேலையைச் செய்து வந்தான். இருவரும் தனித்தனியே தனக்கு தகுந்த வேலையைச் செய்து வந்தனர்.

மேலும் சில நாட்களுக்குப் பிறகு கர்த்தருக்கு காணிக்கை தருவதற்கு காயீன் தான் விளையச் செய்த நிலத்தின் கனிகளை காணிக்கையாகக் கொண்டு வந்தான். ஆபேலும் தன்னுடைய ஆட்டு மந்தையின் முதல் ஆட்டு குட்டியாகவும், அந்த குட்டிகளிலேயே மிகவும் கொழுமையானதாகவும் தேர்வு செய்து சில ஆடுகளை கர்த்தருக்கு காணிக்கையாக கொண்டு வந்தான். ஆதாம் ஏவாளின் இரண்டு ஆண் பிள்ளைகளும் கர்த்தருக்கு காணிக்கை தரவேண்டும் என்று மனதில் நினைத்திருக்கிறார்கள் பாருங்களேன். அப்படி யென்றால் அவர்களுடைய பெற்றோர் அவர்களை கர்த்தருக்கு காணிக்கை தரவேண்டும் என்று சொல்லிக் கொடுத்திருப்பார்கள். கர்த்தருக்கு ஆராதனை செய்ய வேண்டும் என்றும் சொல்லிக் கொடுத்திருப்பார்கள் தானே ஆமாம் கர்த்தாரால் படைக்கப்பட்ட ஆதாமும் ஏவாளும் தங்களுக்கு பிறந்த பிள்ளைகளான காயீன் மற்றும் ஆபேலை கர்த்தருக்கு ஆராதனை செய்கின்ற பிள்ளைகளாக இருக்கும்படி கற்றுக் கொடுத்திருக் கிறார்கள்.



கர்த்தருக்கு காணிக்கை தரும்படி வந்த இருவரில், கர்த்தர் ஆபேலையும் அவனுடைய காணிக்கையையும் ஏற்றுக்கொண்டார். காயீனையும் அவனுடைய காணிக்கையையும் கர்த்தர் ஏற்றுக்கொள்ளவில்லை. கர்த்தருக்கு பிரியமான செல்லங்களா நம்மை படைத்த நம்முடைய கர்த்தர் யாருடைய காணிக்கையை வேண்டுமானாலும் ஏற்றுக்கொள்ளுகிற கர்த்தர் அல்ல. கர்த்தர் எப்பொழுதும் தனக்குப் பிரியமான மற்றும் கர்த்தருடைய வசனத்தின்படி கீழ்ப்படிக்கிற பிள்ளைகளுடைய காணிக்கையையும் அவர்களுடைய ஆராதனையையும் தான் ஏற்றுக்கொள்வார். அப்படியென்றால் கர்த்தர் ஏன் காயீனுடைய காணிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை?.

கர்த்தர் காயீன் உடைய காணிக்கையை ஏற்றுக் கொள்ளாதபோது அவன் எரிச்சலடைந்ததாக வசனம் சொல்லுகிறது. காயீன் கர்த்தர் மீதே கோபம் கொண்டான் என்று நாம் பார்க்கிறோம். அப்படியென்றால் காயீனுடைய குணம் எப்படியிருந்திருக்கும் என்று நினைத்துப் பாருங்களேன். அவனுடைய காணிக்கையை கர்த்தர் ஏற்றுக்கொள்ள வில்லையென்றால், ஏன் என்னுடைய காணிக்கையை கர்த்தர் ஏற்றுக்கொள்ளவில்லை என்று அவன் யோசித்திருக்கவேண்டும் ஆனால் அதற்கு பதிலாக அவன் எரிச்சலைடைந்தான் என்று நாம் படிக்கிறோம். அந்த மாதிரியான குணம் அவனிடம் இருந்ததால் கர்த்தர் அவனையும் அவனுடைய காணிக்கையையும் ஏற்றுக்கொள்ளவில்லை.

நாமும் நம்முடைய குறைகளை சபையில் இருக்கும் போதகரோ அல்லது நம்முடைய பெற்றோரோ சொல்லும்போது நாம் எரிச்சல் அடையாமல் காயீனைப்போல இல்லாமல் நம்முடைய போதகர் சொல்லிக்கொடுப்பதைப் போல நடந்து கொண்டு கர்த்தருக்கு பிரியமான காணிக்கையை செலுத்தவும் கர்த்தர் ஏற்றுக்கொள்ளுகிற ஆராதனையையும் செய்வோம்.

**மனப்பாட வசனம் : நீதிமொழிகள் 8:32** "ஆதலால் பிள்ளைகளே, எனக்குச் செவிகொடுங்கள்; என் வழிகளைக் காத்து நடக்கிறவர்கள் பாக்கியவான்கள்."

– சகோ. சந்தோஷ்குமார் மாகாளியப்பன்

சிறுவர் பகுதி

# யெகோவா ஷாலோம்

கடவுளுக்கு பிரியமான செல்லங்களா! நீங்கள் எல்லாரும் எப்படியிருக்கிறீர்கள்?

நல்லாயிருக்கிறீர்களா? விடுமுறை விட்டாச்சு ஜாலியாக இருக்கிறீர்கள், இப்ப நாம் பைபிளில் இருந்து ஒரு சம்பவத்தை கற்றுக்கொள்வோமா?

யெகோவா ஷாலோம் என்ற வார்த்தை கடவுளின் ஒரு பெயரின் தன்மை. இதன் அர்த்தம் என்ன தெரியுமா? கர்த்தர் நம் சமாதானம், அல்லது யெகோவா சமாதானம் உள்ளவர் என்பதாகும்.

இந்த பெயர் பைபிளில் எங்கு இருக்குது என்று உங்களுக்கு தெரியுமா?

நியாயாதிபதிகள் 6 : 24 – ல் இருக்கிறது.

இஸ்ரயேல் மக்கள் மீதியானியர்களால் ஒடுக்கப்பட்டிருந்த காலத்தில், கடவுள் கிதியோன் என்ற ஒரு மனிதனை இஸ்ரயேல் மக்களை விடுவிக்க எழுப்பினார். கிதியோன் முதலில் மிகவும் பயந்தவனாகவும், பலவீனமானவனாகவும் உணர்ந்தார். அப்ப என்ன நடந்தது என்று தெரியுமா?

தேவதூதர் தோன்றி, பராக்கிரமசாலியே, கர்த்தர் உன்னுடனே இருக்கிறார் என்று கூறினார். கிதியோன் தேவனுடைய அழைப்பிற்கு கீழ்ப்படிந்து, மீதியானியர்களை எதிர்த்துப் போரிடச் சென்றார். அப்பொழுது கடவுள் தனக்கு சமானம் அளித்ததை உணர்ந்து, கிதியோன் ஒரு பலிபீடத்தை கட்டி, அதற்கு



யெகோவா ஷாலோம் என்று பெயரிட்டார். இதன் மூலம் கடவுள் தனக்கு பயமில்லாத சமாதானத்தை தந்ததை உணர்ந்தார்.

கடவுளுக்கு பிரியமான செல்லங்களா! கடவுளே சமாதானத்தின் ஆதாரம், உண்மையான மற்றும் நித்தியமான சமாதானம் கடவுளிடமிருந்தே வருகிறது என்பதை இந்த பெயர் உணர்த்துகிறது.

மொபைல் போன் பார்ப்பது, டீ.வி பார்ப்பது, நண்பர்களோடு நேரம் செலவு செய்வது இது நிரந்தரமான சமாதானம் தராது, பைபிள் படிப்பது, ஜெபிப்பது, சபையில் சின்ன சின்ன வேலை பார்ப்பது, நேரத்திற்கு சபைக்கு செல்வது இதுதான் உண்மையான சமாதானம்.

உண்மையான சமாதானத்தை தேடுவீர்களா! கடவுள் உங்களை ஆசீர்வதிப்பார்.

**மனப்பாட வசனம் :** **சங்கீதம் 29:11** "கர்த்தர் தமது ஜனத்திற்குப் பெலன்கொடுப்பார். கர்த்தர் தமது ஜனத்திற்குச் சமாதானம் அருளி, அவர்களை ஆசீர்வதிப்பார்."

– சகோ. அன்பு ஏசுதாஸ்

## சிறுவர்களுக்கான கேள்விகள்

1. சாமுயேல் தாத்தா சவுல் ராஜாவிடம் கூறின காரியம் என்ன?
2. காயீனும், ஆபேலும் கர்த்தருக்கு கொண்டு வந்த காணிக்கைகள் என்னென்ன?
3. காயீனைப்போல நாம் செய்யக்கூடாதது என்ன?
4. கிதியோனிடம் தேவதூதர் சொன்னது என்ன?
5. நாதாபும், அபியுவும் கர்த்தருக்கு பிரியமில்லாத செய்த வேலை என்ன?

## சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | D. டேப்னி | - | சென்னை |
| 2. | D. ஜுனித்தா | - | சென்னை |
| 3. | A. சாம்குமார் | - | பெருமாள் வலசு |
| 4. | M. அபி பிலேமோன் | - | எழுகம்வலசு |
| 5. | M. ஜோனத்தான் | - | கரூர் |
| 6. | S. ஜுடா லியோ | - | ரஸ்தா |
| 7. | G. ஜெர்லின் | - | ரஸ்தா |
| 8. | A. சுபிக்ஷா | - | பெருமாள் வலசு |
| 9. | A. ஹானா ஜோதிராணி | - | மதுரை |
| 10. | V. ஏஞ்சல் ஜோயன்னா | - | மதுரை |
| 11. | J. நவீன் பீட்டர் | - | மதுரை |
| 12. | J. கிறிஸ்டினா ஜாய்ஸ் | - | மதுரை |

சிறுவர் பகுதி

# அந்நிய அக்கினி

## லேவியராகமம் 10ம் அதிகாரம்

பிள்ளைகளே! எல்லாரும் எப்படியிருக்கிறீர்கள். இந்த மாதம் நீங்களெல்லாரும் பள்ளிக்குச் சென்று உங்கள் நண்பர்களை மீண்டும் பார்த்து, விடுமுறையில் நீங்கள் நீங்கள் சென்ற சுற்றுலா மற்றும் எல்லா காரியங்களையும் சந்தோஷத்தோடு பகிர்ந்திருப்பீர்கள். கடவுள் உங்களுக்கு செய்த நன்மைகளையும், அவர் உங்களோடே இருந்து கரம்பிடித்து பாதுகாத்ததையும் அவர்களோடு பகிர்ந்து கொள்ளுங்கள். இந்த புதிய கல்வியாண்டில் கர்த்தர் உங்களுக்கு எல்லா ஞானத்தையும், புத்தியையும், அறிவையும் தந்தருளுவாராக.

பிள்ளைகளா, இம்மாதம் நாம் ஒரு புதிய காரியத்தைப் பற்றி படிக்கவிருக்கிறோம். அதென்னவெனில், நாம் சென்ற இதழ்களிலே படித்த ஆரோனை பற்றி தெரியுமல்லவா குட்டீஸ்! அவரின் குமாரர்களைப் பற்றி தான் இம்மாதம் நாம் படிக்கவிருக்கிறோம்.

லேவியராகம புத்தகம் கர்த்தரை தொழுதுகொள்ளும் முறைமையைக் குறித்து எழுதப்பட்ட புத்தகமாக காணப்படுகிறது. அதில் பலிகளைக் குறித்தும், பண்டிகைகளைக் குறித்தும் பல காரியங்களை அறிந்து கொள்ளலாம். ஆசாரிய ஊழிய முறைமைகளையும், அவர்கள் தங்களை பரிசுத்தப்படுத்த வேண்டிய விதங்களைக் குறித்தும் எழுதப்பட்டுள்ளது. ஆசாரியர்களுடைய பிரதான வேலைகளில் ஒன்றாக ஆசரிப்பு கூடாரத்தில் காணப்படும் பலிபீடத்தின் மேல் நெருப்பு அவியாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். அதற்காக காலைதோறும் கட்டைகளைப் போட்டு, நெருப்பை மூட்டி, அதைத் தொடர்ந்து எரியும்படிக்குச் செய்ய வேண்டியது அவர்களுடைய வேலை.



ஆரோனும் அவருடைய குமாரர்கள் நாதாபும், அபியுவும் ஆசரிப்புக் கூடாரப் பணிக்காக விஷேசித்த விதமாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஆவார்கள். அவர்களுக்கு மகிமையும் அலங்காரமுமாய் இருக்கும் பொருட்டு, கர்த்தர் அவர்களுக்கு பரிசுத்த வஸ்திரங்களைக் கொடுத்தார். அவர்கள் இஸ்ரவேல் புத்திரருடைய அதிபதிகளாகக் காணப்பட்டார்கள். கர்த்தரே அவர்களுடைய சுதந்திரமாகக் காணப்பட்டார். இப்படி அனேக மேன்மைகளையும், ஆசீர்வாதங்களையும் பெற்ற, ஆரோனின் குமாரராகிய நாதாபும், அபியுவும் ஒருநாள் தூபகலசத்தை எடுத்து, அவைகளில் அக்கினியையும் அதின்மேல் தூபவர்க்கத்தையும் போட்டு, கர்த்தர் தங்களுக்குக் கட்டளையிடாத அந்நிய அக்கினியை அவருடைய சந்நிதியில் கொண்டுவந்தார்கள். அப்பொழுது பரிசுத்த அக்கினி கர்த்தருடைய சந்நிதியிலிருந்து புறப்பட்டு, அவர்களைப் பட்சித்தது, அவர்கள் கர்த்தருடைய சந்நிதியில் செத்தார்கள்.

பிள்ளைகளே! கர்த்தர் அவர்களை (நாதாப், அபியுவ்) எவ்வளவு மேன்மையான காரியங்களை செய்யும்படியாகவும், நம்பிக்கைக்குரியவர்களாகவும், ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக வைத்திருந்தும், அவர்கள் செய்த சின்ன தவறைகூட (கீழ்ப்படியாமை) அவரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஏனென்றால், கர்த்தர் தன் பிள்ளைகள் தனது சொல்லைக் கேட்டு முழுமையாக கீழ்ப்படிவார்கள் என்பதை நினைத்திருந்தார். ஆனால், அவர்கள் செய்ததோ அவருக்குப் பிரியமில்லாத செயல். ஆகையால் அவர்கள் கர்த்தருடைய சந்நிதியிலே மாண்டார்கள்.

ஆகவே, கர்த்தர் சொன்னபடியே பெற்றோருக்கும், ஆசிரியர்களுக்கும், வயதிலே மூத்தவர்களுக்கும், சபைக்கும், ஊழியருக்கும் எல்லா காரியத்திலேயும் கீழ்ப்படிந்து, நான் கர்த்தருடைய பிள்ளை என்பதிலே முன்மாதிரியாகவும், கிறிஸ்துவுக்கு உரியவர்கள் என்றும் எல்லாரிடமும் பேர் பெற்றிருக்க வாழ்வோம். கர்த்தருடைய வார்த்தைக்கு முழுமையாக கீழ்ப்படிகிறதை முதன்மையாக கொள்வோம். கர்த்தர் தாமே உங்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதித்து, பெலப்படுத்தி, வழிநடத்துவாராக. ஆமென். அடுத்த இதழிலே சந்திப்போம் குட்டீஸ்.

**மனப்பாட வசனம்: சங்கீதம் 11:7**

"கர்த்தர் நீதியுள்ளவர், நீதியின்மேல் பிரியப்படுவார், அவருடைய முகம் செம்மையானவனை நோக்கியிருக்கிறது"

– சகோ. ஜான் செல்லையா

# ஜுன் மாத கேள்விகள்

## (ரோமர் புத்தகத்தில் இருந்து)

1. இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல அழைக்கிறவர் யார்?
2. ஆபிரகாம் விசுவாசத்திலே எப்படி இருக்கவில்லை?
3. நமக்காக, ஒப்புக்கொடுக்கப்பட்டும், எழுப்பப்பட்டும் இருக்கிறவர் யார்?
4. பரிசுத்த ஆவியினாலே நம்முடைய இருதயங்களில் ஊற்றப் பட்டிருப்பது எது?
5. நாம் எப்படிப்பட்டவர்களாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்தார்?
6. மீறுதலின் பலன் எதற்கு ஒப்பானதல்ல?
7. பாவம் பெருகின இடத்தில், அதிகமாய் பெருகியது என்ன?
8. இயேசு கிறிஸ்துவின் மரணத்துக்குள்ளாக எதைப் பெற்றிருக்கிறோம்?
9. நாம் இனி எதற்கு ஊழியஞ் செய்யக்கூடாது?
10. சாவுக்கேதுவான சரீரங்களில் எது ஆளக்கூடாது?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 05-07-2025**

அனுப்ப வேண்டிய முகவரி : **சகோதரி. பேபி ராஜா**
45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை - 625 016.
செல் : 92 4421 4421, 92 4431 4431

## சென்ற இதழின் பதில்கள்

| | |
|---|---|
| 1. ரோமர் 2:2 | 6. ரோமர் 3:5 |
| 2. ரோமர் 2:8 | 7. ரோமர் 3:26 |
| 3. ரோமர் 2:9 | 8. ரோமர் 4:4 |
| 4. ரோமர் 2:10 | 9. ரோமர் 4:5 |
| 5. ரோமர் 2:16 | 10. ரோமர் 4:13 |

## சென்ற இதழின் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

| | | |
|---|---|---|
| 1) C. வைலட் கிறிஸ்டோபர் | - | தளவாய்புரம் |
| 2) A. லலிதா | - | புதுக்கோட்டை |
| 3) P. ரேச்சல் ஜானிமா | - | நெல்லை |
| 4) Mrs. A. அன்னத்தாய் ஆல்பர்ட் | - | தூத்துக்குடி |
| 5) Mrs. இந்திரா பாண்டி | - | மதுரை |
| 6) S. கார்த்திக் | - | கரூர் |
| 7) Mrs. சூரிய பிரியா | - | மதுரை |
| 8) M. அன்பழகன் | - | தங்கமேடு |
| 9) P. ஷைனி | - | காங்கேயம் |
| 10) Mrs. D. குளோரி திலகவதி | - | சென்னை |
| 11) Mrs. J. பூங்கொடி | - | முத்தூர் |
| 12) S. பேபி சந்தோஷ்குமார் | - | தங்கமேடு |
| 13) V. மைனாவதி வசந்த் | - | தங்கமேடு |
| 14) Mrs. சாந்தி வில்லியம் | - | புதுக்கோட்டை |
| 15) D.I. அன்பு சுதந்திரம் | - | ஏர்வாடி |
| 16) Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் | - | சேலம் |
| 17) M. பியூலா சாந்தி | - | ஈரோடு |
| 18) Mrs. குளோரி பால்ராஜ் | - | தஞ்சாவூர் |
| 19) A. கார்பஸ் பிலேமோன் | - | மதுரை |
| 20) M. ராஜா | - | கரூர் |
| 21) Mrs. C. வள்ளி சிதம்பரம் | - | கரூர் |
| 22) G. ஏஞ்சலம்மாள் | - | மதுரை |
| 23) Y. ஜெயசுதா பொன்செல்வி | - | சென்னை |
| 24) Mrs. R. சரோஜா | - | தென்கலம் |
| 25) S. அசோக்குமார் பிரின்ஸ் | - | தூத்துக்குடி |
| 26) Mrs. சாந்தி ஜோயல் | - | திருச்சி |
| 27) Mrs. மேரி ராஜ் | - | மதுரை |
| 28) M. ஈஸ்வரி முருகன் | - | கரூர் |
| 29) S. டேவிட் சாந்தகுமார் | - | வல்லம் |
| 30) A. ரோஸ்மேரி | - | சென்னை |
| 31) Mrs. தேவி ராஜாசிங் | - | திருப்பூர் |
| 32) Mrs. பெரில் பாஸ்கர் | - | படப்பை |
| 33) Mrs. தெல்மா ஸ்டான்லி | - | மதுரை |
| 34) Mrs. பியூலா ஜேசுராஜன் | - | புதுவை |
| 35) J. கிறிஸ்டோபர் சாந்தகுமார் | - | மதுரை |
| 36) S. ஷீபா ஞானவின்சா | - | டோனாவூர் |
| 37) J.V. சுந்தரபாய் வில்லியம் | - | சேலம் |
| 38) Mrs.P. சமாதானம் பீட்டர் | - | விருதுநகர் |
| 39) Mrs. A. இமல்டா சுந்தர்சிங் | - | ஈரோடு |
| 40) R. ஞானசிரோன்மணி | - | மதுரை |
| 41) Mrs. சாந்தி ஜோயல் | - | திருச்சி |
| 42) M.S. ஜேம்ஸ் | - | திண்டுக்கல் |
| 43) Mrs. ஆட்லின் ஆனந்தன் | - | மதுரை |
| 44) Mrs. பட்ரிசியா டேவிட் | - | சேலம் |
| 45) Mrs. ஹெலன் திலக் | - | தூத்துக்குடி |
| 46) J. ஜான்சி | - | ஆனைமலை |
| 47) A. அரவிந்த் | - | மதுரை |
| 48) D. சந்திரன் மோசஸ் | - | பெங்களூர் |
| 49) S. பாக்கியராஜம் | - | மதுரை |
| 50) Mrs. ராணி குமரன் | - | கரூர் |
| 51) Mrs. ஹெப்ஸிபா தாமஸ் | - | படப்பை |
| 52) Mrs. ஜெயந்தி செல்வகுமாரி | - | தரங்கம்பாடி |
| 53) N. ஜான் செல்லையா | - | மதுரை |
| 54) Mrs. J. ஜெயராணி ஜான் | - | மதுரை |

தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !

Place of Publication : 45 C/1, CHURCH LANE, CORONATION STREET, ARASARADI, MADURAI - 16.
Printed & Published by P.C. PHILEMON RAJAH
Printed at THEE CLASSIC PRINTERS, 27, KAKA THOPPU, MADURAI - 1 ☎ 94421 23819
Registered News Paper No. : TNTAM/2011/42166
Postal Registration No. : TN/MA/67/2024 - 2026
Date of Publication : 9th June 2025
Posted at Arasaradi HPO on 10th & 11th June 2025


## கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்









அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/- மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!

## தபால் வழி பைபிள் பாடங்கள்






## கைபிரதிகள்








உங்கள் சுவிசேஷ ஊழியத்திற்கு கைபிரதிகள் பல்வேறு தலைப்புகளில் பாதி விலையில் கிடைக்கும். விபரங்களுக்கு : 92 4421 4421, 92 4431 4431

## BIBLE STUDY BOOKS IN ENGLISH











AVAILABLE FOR SPECIAL PRICE!


If undelivered please return to :

**EDITOR**
**KIRUBAIYULLA VAARTHAI**
P.O. Box No. 15, Arasaradi,
Madurai - 625 016. India
biblecourseindia@gmail.com
@graciouswordcoc
92 4421 4421, 92 4431 4431

To